# அரையாண்டு
# அரசிறை நிலைமை அறிக்கை
# 2011

நிதி திட்டமிடல் அமைச்சு
இலங்கை

# அரையாண்டு
# அரசிறை நிலைமை அறிக்கை - 2011

**2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது**

**மஹிந்த ராஜபக்ஷ**
**சனாதிபதியும் நிதி, திட்டமிடல் அமைச்சரும்**

**2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ்**

**கௌரவ நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்ட**

**அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை**

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி நிதி அமைச்சரானவர் வருடத்தில் யூன் மாதத்தின் இறுதித் தினத்தில் அரசிறை நிலைமை அறிக்கையினை பொது மக்களுக்குச் சமர்ப்பிக்கவும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் முன் வைக்கவும் கேட்கப்பட்டுள்ளார்.

இந்த அறிக்கையின் நோக்கம் அரசாங்கத்தின் அரசிறைச் செயலாற்றுகையையும் அரசாங்கத்தின் அரசிறை உபாயத்தினையும் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதாகும்.

அறிக்கையின் உள்ளடக்கமானது 2011 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது அரசாங்கத்தின் வருமானம், செலவினம், காசுப் பாய்ச்சல் செயற்பாடுகள் மற்றும் பெறுகைகளின் செயலாற்றுகையினைக் கொண்டுள்ளது. அத்துடன் பேரண்டப் பொருளாதார செயலாற்றுகை, விலை அபிவிருத்தி, வெளிநாட்டு உதவி, அரசாங்கப் படுகடன் மற்றும் கொடுப்பனவு மீதி அத்துடன் கடன் அபிவிருத்தி என்பவற்றுடன் தொடர்பான கிடைப்பனவிலுள்ள தகவல்களினை அடிப்படையாகக் கொண்டு இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களினை வழங்குகின்றது.

# அத்தியாயம் 1

# அரசிறை அபிவிருத்தி

## மேன்நோக்கு

- பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மறுமலர்ச்சி காரணமாக சர்வதேச வியாபாரம் தொடர்பான செயற்பாடுகளின் விரிவாக்கத்தினால், 2011 இன் முதல் 0 ஐந்து மாதங்களின்போது அரசாங்க வருமானம் 19.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன் 2010 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வரி வருமானம் 23.8 சதவீதத்தினை பதிவாக்கியுள்ளது. பெற்றோலிய உற்பத்திகள், திரவ பெற்றோலிய வாயு. தெரிவு செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் மற்றும் பால் மா என்பவற்றின் மீது வழங்கப்பட்ட இறக்குமதி தீர்வைச் சலுகைகள் இக்காலப்பகுதியின்போது வருமான செயலாற்றுகையில் பாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்தியது.

- அரசாங்க முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களில் அரசாங்கம் தொடர்ந்தும் வழங்கி வரும் அர்ப்பணிப்பிலே, 2011 இன் முதல் நான்கு மாதங்களின்போது மீண்டெழும் செலவினம் 10.2 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை மூலதன செலவினமானது மிக உயர்ந்த விகிதமான 17.2 சதவீதத்தினால் அதிகரித்ததன் மூலம் காண முடிகின்றது.

- அதிகரித்த வருமான செயலாற்றுகை மற்றும் மீண்டெழும் செலவினத்தில் தாமத வளர்ச்சி என்பவற்றின் காரணமாக, 2011 இன் முதல் நான்கு மாதங்களின் போது வருமானக் கணக்கில் பற்றாக்குறையானது மேலும் ரூபா 75 பில்லியனால் வீழ்ச்சியடைந்ததுடன், 2010 இல் இதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த மொ.உ.உற்பத்தியில் காணப்பட்ட 1.5 சதவீத பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 1.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. சாதாரண நியதிகளின்படி முழு மொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையானது ரூபா 172 பில்லியன் அதிகரிப்பொன்றினைக் காட்டியதுடன், இது முன்னைய வருடத்தில் இதே காலப்பகுதியில் காணப்பட்ட மொ.உ.உற்பத்தியில் 3.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

- அரசாங்கம் 2011 இன் முதல் நான்கு மாதங்களின்போது மொத்த கருத்திட்டம் தொடர்பான கடன்களாக 382.5 மில்லியன் ஐ.அ.டொலர்களை திரட்டிக்கொள்ள முடியுமாக இருந்தது.

**அட்டவணை 1.1**

**வரவு செலவுத் திட்டச் சுருக்கம் (ஜன - ஏப்) - பொருளாதார வகுப்பாக்கம்**

**ரூபா.மில்.**

| | 2010 | 2011 |
|---|---|---|
| **வருமானம் மற்றும் மானியம்** | **243,345** | **286,231** |
| **வருமானம்** | **240,654** | **284,913** |
| வரி | 204,035 | 249,790 |
| வரியல்லாதவை | 36,619 | 35,123 |
| **செலவினம்** | **2,691** | **1,318** |
| நடைமுறை | **410,865** | **458,503** |
| பகிரங்க முதலீடு | 327,041 | 360,283 |
| பிற | 89,114 | 103,948 |
| **வருமானக் பற்றாக்குறை (-) / மிகை (+)** | (5,290) | (5,728) |
| **பொதுவான வ.செ.தி பற்றாக்குறை (-) / மிகை (+)** | **(86,387)** | **(75,370)** |
| நிதியளிப்பு | **(167,520)** | **(172,272)** |
| மானியம் | **167,520** | **172,272** |
| வெளிநாட்டுக் கடன்கள்* | 42,332 | 17,136 |
| உள்ளூர் நிதி ஏற்பாடு | 125,188 | 155,136 |
| வங்கியல்லாதவை | 109,064 | 90,485 |
| வங்கி | 16,124 | 64,652 |
| வருமானம்/ மொ.உ.உ (%) | 4.3 | 4.4 |
| நடைமுறைச் செலவினம்/ மொ.உ.உ (%) | 5.8 | 5.6 |
| பகிரங்க முதலீடு/ மொ.உ.உ (%) | 1.6 | 1.6 |
| வருமானப் பற்றாக்குறை/ மொ.உ.உ (%) | (1.5) | (1.2) |
| பொதுவான வ.செ.தி பற்றாக்குறை/ மொ.உ.உ (%) | (3.0) | (2.7) |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

* *திறைசேரி முறிகளின் வெளிநாட்டு முதலீடுகள் உள்ளடங்கலாக*

## அரசாங்க வருமானம்

- 2011 ஜனவரி – மே காலப்பகுதியின்போது அரசாங்கத்தின் வருமானம் ரூபா 358,266 மில்லியனாக இருந்ததுடன் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 198 சதவீத அதிகரிப்பொன்றினை பதிவாக்கியுள்ளது. முழு மொத்த உள்நாட்டு பொருளாதார செயலாற்றுகையின் மேம்பாடு இறக்குமதியில் அதிகரிப்பினை ஏற்படுத்தியதுடன், இக்காலப்பகுதியின்போது வருமான சேகரிப்பிலும் இந்த வளர்ச்சி பங்களிப்பு செய்தது

- இறக்குமதித் தீர்வைகள், து.வி.அபிவிருத்தி அறவீடு மற்றும் இறக்குமதிகள் மீதான பெ.சே.வரி போன்ற வர்த்தகம் தொடர்புடைய வரிகளின் மேம்பாட்டினை இறக்குமதிகளின் செயலாற்றுகையின் மேம்பாடு காரணமாக குறித்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் அவதானிக்க முடியுமாக இருந்தது. மோட்டார் வாகனங்கள் மீது ஏற்புடையதான தீர்வை குறைப்பானது இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை ஏற்படுத்தியதுடன் மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீது உற்பத்தி வரி அதிகரிப்பிற்கும் காரணமாகியது. அதேவேளை உப துறைகளில் வருமான வரி வளர்ச்சியின் உயர்ந்த விகிதம் பங்களிப்புச் செய்தது.

**அட்டவணை 1.2**

**வருமான செயலாற்றுகை - (ஜனவரி - மே)**

&gh kpy;.

| விடயம் | 2010 | 2011 | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| **வரி வருமானம்** | **258,389** | **319,764** | **23.8** |
| வருமான வரி | 49,402 | 60,072 | 21.6 |
| பெ.சே.வரி | 79,206 | 86,931 | 9.8 |
| உற்பத்தி தீர்வை | 44,213 | 70,758 | 60.0 |
| செஸ் வரி | 17,553 | 24,194 | 37.8 |
| து.மு.வி.நிலைய அபி. அறவீடு | 21,053 | 30,098 | 43.0 |
| இறக்குமதித் தீர்வை | 16,947 | 16,344 | (3.6) |
| பிற | 30,015 | 31,367 | 4.5 |
| **வரியல்லாத வருமானம்** | **40,770** | **38,502** | **(5.6)** |
| **மொத்த வருமானம்** | **299,159** | **358,266** | **19.8** |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## வரைபு 1.1




### வருமான வரி

- 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 49,402 மில்லியனாகக் காணப்பட்ட மொத்த வருமான வரி வருமானம் 2011 இன் முதல் ஐந்து மாதங்களின்போது ரூபா 60,072 மில்லியனால் அதாவது 21.6 சதவீதத்தினால் அதிகரித்தது. இது நிறுவனம் மற்றும் நிறுவனமல்லாத, உ.பொ.செ.வரி, பொருளாதார சேவைக் கட்டணம் மற்றும் வட்டி மீதான நிறுத்தி வைத்தல்வரி போன்ற உப துறைகளிலிருந்து சிறந்த பங்களிப்பினால் ஏற்பட்டதாகும். அத்துடன் அதிகரித்த வருமான வரியிலிருந்து பெறப்படும் கட்டணங்கள் மற்றும் பங்கிலாபங்கள் அத்துடன் பருவகால விற்பனைகள், வங்கித்தொழில் அலகுகளினால் மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வுகள், முகாமைக் கட்டணங்கள் மற்றும் பங்கிலாபங்கள் மீதான நிறுத்தி வைத்தல் வரி அதிகரிப்பு சம்பள அதிகரிப்புகள் மற்றும் கொடுப்பனவுகள் மீதான உ.பொ.செ.வரி அதிகரிப்பு, பொருளாதார சேவைக் கட்டணத்தின் சிறந்த செயலாற்றுகை என்பன வாகன இறக்குமதிகள் அதிகரிக்கவும் பொருளாதார செயற்பாடுகள் விரிவாக்கம் பெறவும் காரணமாகியது.

**அட்டவணை 1.3**

**பெறுமதி சேர் வரி செயலாற்றுகை (ஜனவரி - மே)**

ரூபா.மில்.

| வரி அடிப்படை | 2010 | 2011 | வளர்ச்சி % |
|---|---|---|---|
| நிறுவன மற்றும் நிறுவனமல்லாத | 20,922 | 26,180 | 25.1 |
| உ.பொ.செ. வரி | 7,280 | 8,435 | 15.9 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 8,130 | 10,503 | 29.2 |
| வட்டிமீதான நிறுத்தி வைத்தல் வரி / கட்டணம் மற்றும் பிற | 13,070 | 14,954 | 14.4 |
| **மொத்தம்** | **49,402** | **60,072** | **21.6** |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## பெறுமதிசேர் வரி

- 2010 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ரூபா 79,206 மில்லியனைப் பதிவாக்கிய பெறுமதிசேர் வரி வருமானம் 2011 இன் முதல் ஐந்து மாதங்களின்போது ரூபா 86,931 மில்லியனாக காணப்பட்டது. இறக்குமதிகளின் பெறுமதியில் அதிகரிப்பு இறக்குமதிகள் மீதான பெறுமதிசேர் வரியினை அதிகரிப்பதற்கு காரணமாகியதுடன் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 30,197 மில்லியனிலிருந்து ரூபா 39,416 மில்லியனாக அதிகரித்தது. உள்நாட்டு மூலங்கள் மீது பெறுமதிசேர் வரியிலிருந்து வருமானம் சிறிதளவு வீழ்ச்சியடைந்திருந்தது.

**அட்டவணை 1.4**
**பெறுமதி சேர் வரி செயலாற்றுகை (ஜனவரி - மே)**

ரூபா.மில்.

| வரி அடிப்படை | 2010 | 2011 | வளர்ச்சி % |
|---|---|---|---|
| உள்நாட்டு | 49,551 | 48,124 | (2.9) |
| இறக்குமதி | 32,362 | 41,846 | 29.3 |
| **மொத்த வருமானம்** | **81,913** | **89,970** | **9.8** |
| மீள் கொடுப்பனவுகள் | 2,707 | 3,039 | 12.3 |
| **தேறிய வருமானம்** | **79,206** | **86,931** | **9.8** |
| மொத்த வருமானத்தில் மீள்கொடுப்பனவு % | 3.3 | 3.4 | |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## உற்பத்தி வரிகள்

- மதுபானம், சிகரெட்டுகள் மற்றும் புகையிலை, பெற்றோலிய உற்பத்திகள், மோட்டார் வாகனங்கள் மற்றும் பிற பொருட்கள் மீதான உற்பத்தித் தீர்வை வருமானம் 2010 இன் முதல் ஐந்து மாதங்களின்போது ரூபா 70,758 மில்லியனை உருவாக்கியதுடன் இது 2010 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 44,214 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 60 சதவீத அதிகரிப்பொன்றினைக் காட்டியது.

- 2011 இன் முதல் ஐந்து மாதங்களின்போது வன் மற்றும் மென் மதுபானங்களின் உற்பத்தி முறையே 12 சதவீதம் மற்றும் 30 சதவீதத்தினால் அதிகரித்தது. இதனடிப்படையில் மதுபானம் மீதான தீர்வை, உற்பத்தி வரி என்பன 59 சதவீதத்தினால் அதாவது 2011 ஜனவரி – மே மாதத்தில் ரூபா 22,725 மில்லியனாக அதிகரித்தது.

- சிகரெட்டுகள் மற்றும் புகையிலை மீதான உற்பத்தி தீர்வை வருமானம் 2011 ஜனவரி – மே மாதத்தில் ரூபா 19,845 மில்லியனால் அதிகரித்துடன் 2010 இன் இதே காலப்பகுதியில் ரூபா 15,663 மில்லியனாக காணப்பட்டது. இதற்கான பிரதான காரணம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய சந்தை வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டதுடன் சிகரெட்டுக்கள் மீதான உற்பத்தித் தீர்வை அதிகரிக்கப்பட்டதுமாகும்.

- பெற்றோலியம் மற்றும் மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தித் தீர்வை வருமானம் இக்காலப்பகுதியின்போது இரட்டிப்பாக அதிகரித்ததுடன் 2010 இல் ரூபா 12,284 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 26, 888 மில்லியனால் அதிகரித்ததுடன் குறிப்பாக மோட்டார் வாகனங்களின் இறக்குமதி விரிவாக்கம் காரணமாகியது.

**அட்டவணை 1.5**
**உற்பத்தி வரி செயலாற்றுகை - (ஜனவரி - மே)**

ரூபா.மில்.

| வரி அடிப்படை | 2010 | 2011 | வளர்ச்சி % |
|---|---|---|---|
| மதுபானம் | 14,257 | 22,725 | 59.4 |
| சிகரெட்டுககள் | 15,663 | 19,845 | 26.7 |
| பெற்றோலியம் மற்றும் மோட்டார் வாகனங்கள் | 12,284 | 26,888 | 118.9 |
| பிற | 2,010 | 1,300 | (35.3) |
| **மொத்தம்** | **44,214** | **70,758** | **60.0** |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

**வரைபு 1.2**



## இறக்குமதி தீர்வை

- 2011 இன் முதல் ஐந்து மாதங்களின்போது இறக்குமதித் தீர்வையிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 2010 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ரூபா 30,098 மில்லியனால் அதாவது 43 சதவீதத்தினால் அதிகரித்தது. இந்த அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக இருந்தது மோட்டார் வாகனங்களின் இறக்குமதி அதிகரிப்பாகும். அதேநேரம், பெற்றோலியப் பொருட்கள் மற்றும் பால்மா இறக்குமதிகள் மீதான இறக்குமதித் தீர்வை நீக்கப்பட்டதும் அவற்றினது உள்நாட்டு விலைகளை அதிகரிப்பிற்கான காரணமாகும். இதற்கு மேலதிகமாக, வருமான பாதுகாப்புக் கட்டளை மோட்டார் வாகனங்களின் சிபாரிசு செய்யப்பட்ட வயது எல்லையினை மூன்றரை வருடத்திலிருந்து இரண்டு வருடங்களாக குறைக்கப்பட்டதுடன் சுங்கத் தீர்வை விகிதங்கள் இணைக்கப்பட்ட இலத்திரனியல் வாகனங்கள் மற்றும் குறைந்த சிலிண்டர் கொள்ளளவு வாகனங்கள் தொடர்பில் மாற்றப்பட்டன.

- தெரிவு செய்யப்பட்ட விற்பனைப் பொருட்கள் மீதான ஒற்றை வரியான விசேட நுகர்வுப் பொருட்கள் அறவீட்டிலிருந்து பெறப்பட்ட வருமானம் 2010 இன் இதேகாலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 4,191 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011 ஜனவரி – மே காலப்பகுதியில் ரூபா 6,325 மில்லியன் அறவிடப்பட்டது. இது 51 சதவீத அதிகரிப்பொன்றாகும். வருமான சேகரிப்பில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பானது உள்ளூர் உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் அதேவேளை வெள்ளைப்பூடு மற்றும் பட்டானா மீதான வரி அறவீட்டினை உயர் தொகையில் பேண முடியுமாக இருந்தது.

## பிற வரிகள்

- துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு 2011 இன் முதல் ஐந்து மாதங்களின் போது ரூபா 24,194 மில்லியனாக இருந்ததுடன் 2010 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 38 சதவீத அதிகரிப்பொன்றாகும். இது இறக்குமதிகளின் செயலாற்றுகை மேம்பாடு காரணமாக ஏற்பட்டதாகும். 2010 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் செஸ் வருமானமானது 17.3 சதவீதத்தினால் ரூபா 11,207 மில்லியன் அதிகரிப்பொன்றினை பதிவாக்கியிருந்த அதேவேளை மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சில குறிப்பிட்ட பொருட்கள் மீது செஸ் வரி நீக்கப்பட்டதுடன் சில பொருட்கள் மீது தற்பொழுதிருக்கும் செஸ் வரி வீதமும் குறைக்கப்பட்டது.

- 2011 இன் முதல் ஐந்து மாதங்களில் தேசக் கட்டுமான வரியானது ரூபா 24,516 மில்லியனை பெற்றதுடன் இதில் ரூபா 8,172 மில்லியன் அல்லது 33 1∴3 சதவீதம் 2011 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து மாகாண சபைகளுக்கான மாற்றல்கள் என்ற வகையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இக் காலப் பகுதியில் மத்திய அரசாங்கத்திற்கான வருமானம் ரூபா 16,344 மில்லியனாக இருந்தது. இதற்கு மேலதிகமாக ரூபா 353 மில்லியன் மோட்டார் வாகன பதிவுக் கட்டண வருமானமாக மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது. (இந்த மூலத்திலிருந்து பெறப்பட்ட மொத்த வருமானத்தில் 70 சதவீதம்) முத்திரைத் தீர்வையாக அறவிடப்பட்ட ரூபா 2,804 மில்லியன் முழு வருமானமும் 2011 இன் முதல் ஐந்து மாதங்களின் போது மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது.

**அட்டவணை 1.6**
**மாகாண சபைகளுக்கான வருமான மாற்றல்கள்**
**(2011 சனவரி – மே)**

ரூபா மில்

| மாதம் | தேசக் கட்டுமான வரி | | | முத்திரைத் தீர்வை |
|---|---|---|---|---|
| | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | சுங்கம் | மொத்தம் | |
| சனவரி | 974 | 914 | 1,888 | 1,138 |
| பெப்ரவரி | 536 | 805 | 1,341 | 259 |
| மார்ச் | 583 | 1,044 | 1,627 | 280 |
| ஏப்ரல் | 892 | 874 | 1,766 | 855 |
| மே | 644 | 907 | 1,551 | 272 |
| **மொத்தம்** | **3,628** | **4,544** | **8,172** | **2,804** |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## வரியல்லாத வருமானம்

- 2011 இன் முதல் ஐந்து மாதங்களின்போது சேகரிக்கப்பட்ட மொத்த வரியல்லாத வருமானம் 2010 இல் காணப்பட்ட ரூபா 40,770 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 38,502 மில்லியனாக காணப்பட்டது. அரசாங்க வங்கிகள், விமான சேவைகள் கம்பனி மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல்கள் ஆணைக்குழு என்பவற்றிலிருந்து பெறப்பட்ட இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் ரூபா 9,000 மில்லியன் இலாபங்களாக மத்திய வங்கியினால் மாற்றப்பட்டதுடன் இது இக்காலப்பகுதியில் வரியல்லாத வருமானமாக பெறப்பட்டதாகும்.

## அட்டவணை - 1.7

## நிதி மற்றும் வருமானம் தொடர்பான சட்டவாக்கங்கள் (2010 நவ – 2011 மே)

| நியதிச்சட்டங்கள் | நோக்கம் |
|---|---|
| 2011 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டம் | விகித மாற்றங்கள், விலக்களிப்பு வழங்கல், உள்ளீட்டு வரி வரையறையினை விரிவாக்குதல், பெ.செ.வரி நிறுத்தி வைத்தல் திட்ட செயற்பாட்டினை மாற்றுதல் |
| 2011 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தேசக் கட்டுமாண வரிச் சட்டம் | விகித மற்றும் பொறுப்புக்களின் மாற்றம், வரி எல்லையினை அதிகரித்தல் மற்றும் விலக்களிப்பு வழங்கல் |
| 2011 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க பொருளாதார சேவைக்கட்டண (திருத்தச்) சட்டம் | இலகுபடுத்தப்பட்ட விகித அட்டவணை, சில நிறுவனங்களுக்கான விலக்களிப்பு அறிமுகம், மாதாந்த கொடுப்பனவுடன் வருடாந்த திரட்டு, வரி எல்லையினை ரூபா 25 மில்லியனாக அதிகரித்தல் மற்றும் விலக்களிப்பு வழங்கல் |
| 2011 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க உபாய அபிவிருத்தி கருத்திட்டம் (திருத்தச்) சட்டம் | காலத்திற்குக் காலம் வரி விலக்களிப்புகள் வழங்குவதை உறுதிப்படுத்தல். விசேட முதலீட்டினை கவருவதற்கு வசதியளிக்கும் வகையில் முழுமையாக அல்லது பகுதியளவான விலக்களிப்பு |
| 2011 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க மாகாண சபைகள் (முத்திரைத் தீர்வை மாற்றல்) சட்டம் | அரசாங்கத்தினால் சேகரிக்கப்பட்ட அனைத்து முத்திரைத் தீர்வை வருமானங்களையும் மாகாண சபைகளுக்கு மாற்றுதல். |
| 2011 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பற்றுவரி (நீக்கல்) சட்டம் | 2011 ஏப்ரல் 1 இலிருந்து பற்று வரியினை நீக்குதல். |
| 2011 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம் | **சமூகப் பொறுப்பு அறவீடு**<br>2011 ஏப்ரல் 1 இலிருந்து வருமான வரி மீதான ச.பொ.அறவீட்டினை நீக்குதல் மற்றும் 2010 நவம்பர் 22 இலிருந்து ஏனைய வரிகளை நீக்குதல்<br><br>**பங்கு கொடுக்கல் வாங்கல் அறவீடு**<br>2011 ஜனவரி 1 இலிருந்து தற்போதைய விகிதத்தினை 0.2 சதவீதத்திலிருந்து 0.3 சதவீதமாக அதிகரித்தல்.<br><br>**நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு**<br>நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட விசேட கருத்திட்டங்களுக்கான விலக்களிப்புகளை வழங்குதல்<br><br>**ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் அறை மீதான அறவீடு**<br>ஐந்து நட்சத்திர ஹோட்டல்களின் வதிவிட வசதியினை அடிப்படையாகக் கொண்டு அத்தகைய ஹோட்டல்கள் 125 ஐ.அ.டொலர்களுக்கு குறையாமல் அறவிடுவதனை அறிமுகப்படுத்தல். |

| | |
|---|---|
| | **மோட்டார் வாகனங்கள் மீதான அறவீடு**<br>சொகுசு மற்றும் அரை சொகுசு வாகனங்கள் மீதான புதிய விகித அட்டவணையினை அறிமுகப்படுத்தல். |
| 2011 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு (நீக்கல்) சட்டம் | 2011 ஜனவரி 1 இலிருந்து பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீட்டினை நீக்குதல் |
| 2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் | கணிப்பீட்டு முறைமையினை மாற்றுவதன் மூலம் ஏற்படும் பாதிப்புகளை தவிர்த்தல். |
| 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | பல்வேறு நிதிச் சட்டங்களினால் விதிக்கப்பட்ட துறைமுகங்கள் விமான நிலைய அறவீட்டினை துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் என்ற சட்டமொன்றின் மூலம் சில விலக்களிப்புக்களை வழங்கும் வகையில் ஒன்றிணைத்தல். |
| 2011 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் | பராட்டே நிறைவேற்றல் செயன்முறையின் மூலம் மூலதன தொகை மாத்திரம் சிறிய மற்றும் நடுத்தர துறை நன்மைக்காக ரூபா 5 மில்லியனுக்குக் குறைவாக அறவிடுதல். |
| 2011 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க உற்பத்தி (திருத்தச்) சட்டம் | உள்நாட்டுக் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்காக பனங்கள்ளு மற்றும் கித்துள் மரங்களில் கள்ளிறக்கல் விசேட அனுமதி பெறாமல் மேற்கொள்ள வசதியளித்தல். |
| 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டம் | தொலைத்தொடர்பு சேவைகள் மீதான அனைத்து அறவீடுகளையும் (31 சதவீதம்) ஒரே அறவீடாக 2011 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து 20 சதவீதமாக அறிமுகப்படுத்தல். |
| 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டம் | தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஏற்புடையதான விகிதங்கள் மற்றும் கட்டங்களை மாற்றுதல், வரி உச்ச மட்டத்தினை அதிகரித்தல், விலக்களிப்புகள் வழங்குதல், இலாபம் மற்றும் வருமான மாற்றங்களை அறிமுகப்படுத்தல், நிறுத்தி வைத்தல் வரி மற்றும் பிற நிர்வாக மாற்றங்களைச் செய்தல். |
| 2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டம் | 2011 ஏப்ரல் 1 ஆம் திகதியிலிருந்து சுதந்திரமான வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு ஒன்றினை உருவாக்குவதுடன் வரி மேன்முறையீட்டு விசாரணைகள் தொடர்பான செயன்முறைகளை அறிமுகப்படுத்தல், உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் தற்பொழுதிருக்கும் மீளாய்வுச் சபைக்குப் பதிலாகச் செயற்படுதல், வரி மேன்முறையீடுகளை விரைவாக விசாரிப்பதை உறுதிப்படுத்தல். |

## அட்டவணை 1.8

## அரசிறை அளவீடுகள் (2010 பெப்ரவரி – 2011 மே)

| | |
|---|---|
| உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) | |
| **01.03.2010** | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2010.03.01 திகதிய 1643/1 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.) |
| **31.05.2010** | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2010.05.31 திகதிய 1656/3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.) |
| **22.11.2010** | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2010.11.22 திகதிய 1681/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.) |
| **15.12.2010** | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2010.12.15 திகதிய 1684/28 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.) |
| **31.12.2010** | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2010.12..31 திகதிய 1686/43 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.) |
| **21.04.2011** | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2011.04.21 திகதிய 1702/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.) |
| **21.04.2011** | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2011.04.21 திகதிய 1702/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.) |
| **21.04.2011** | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2011.04.21 திகதிய 1702/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.) |
| **16.05.2011** | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2011.05.16 திகதிய 1706/3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல். |
| **01.06.2011** | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2011.06.01 திகதிய 1708/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.) |
| செஸ் வரி | |
| **19.11.2010** | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2010.11.19 ஆம் திகதிய 1680/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - இறக்குமதி செஸ் விகித திருத்தம் |
| **22.11.2010** | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2010.11.22 ஆம் திகதிய 1681/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) – ஏற்றுமதி செஸ் விகித திருத்தம் |
| **23.12.2010** | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2010.12.23 ஆம் திகதிய 1685/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) – தெங்கு மீதான ஏற்றுமதி செஸ் விகித திருத்தம் |

| | |
|---|---|
| **04.03.2011** | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2011.03.04 ஆம் திகதிய 1695/31 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - இறப்பர் ஏற்றுமதி மீதான செஸ் விகித திருத்தம் |
| **மதுவரி கட்டளைச் சட்டம்** | |
| **12.02.2010** | 912 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2010.02.12 ஆம் திகதிய 1640/30 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.) |
| **17.02.2010** | 913 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2010.02.17 ஆம் திகதிய 1641/29 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) |
| **06.05.2010** | 914 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2010.05.06 ஆம் திகதிய 1652/40 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) |
| **31.05.2010** | 915 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2010.05.31 ஆம் திகதிய 1656/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) |
| **23.06.2010** | 916,917,918 மற்றும் 919 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2010.06.23 ஆம் திகதிய 1659/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) கள்ளு அல்லது சீரியல், மொலேசெஸ், பனை, தெங்கு மற்றும் பதனிடப்பட்ட சாராயம், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு ஸ்பிரித்து மற்றும் மோல்ட் மதுபானம் மீதான மதுவரி விகிதத்தினை திருத்துதல். |
| **28.09.2010** | 920 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2010.09.28 ஆம் திகதிய 1673/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) |
| **28.10.2010** | 921, 922,923 மற்றும் 924 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2010.10.28 ஆம் திகதிய 1677/24 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) கள்ளு அல்லது சீரியல், மொலேசெஸ், பனை, தெங்கு மற்றும் பதனிடப்பட்ட சாராயம், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு ஸ்பிரித்து மற்றும் மோல்ட் மதுபானம் மீதான மதுவரி விகிதத்தினை திருத்துதல். |
| **28.10.2010** | 925 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2010.10.28 ஆம் திகதிய 1677/23 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) மருந்து தயாரிப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் மற்றும் பிற பயன்பாட்டிற்காக தயாரிக்கப்பட முடியுமான ஸ்பிரித்து (ஈதைல் மதுசாரம்) மீதான மதுவரி விகிதத்தினை திருத்துதல். |
| **19.11.2010** | 926 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2010.11.19 ஆம் திகதிய 1680/24 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) வருடாந்த உரிமப் பத்திர கட்டணத்தைக் குறிப்பிடுதல் |
| **19.11.2010** | 927, 928,929 மற்றும் 930 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2010.11.19 ஆம் திகதிய 1680/23 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) கள்ளு அல்லது சீரியல், மொலேசெஸ், பனை, தெங்கு மற்றும் பதனிடப்பட்ட சாராயம், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு ஸ்பிரித்து மற்றும் மோல்ட் மதுபானம் மீதான மதுவரி விகிதத்தினை திருத்துதல். |

| | |
|---|---|
| **05.01.2011** | 931,932,933 மற்றும் 934 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2011.01.05 ஆம் திகதிய 1687/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) கள்ளு அல்லது சீரியல், மொலேசெஸ், பனை, தெங்கு மற்றும் பதனிடப்பட்ட சாராயம், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு ஸ்பிரித்து மற்றும் மோல்ட் மதுபானம் மீதான மதுவரி விகிதத்தினை திருத்துதல். |
| **21.01.2011** | 935 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2011.01.21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) வைன், பியர் மற்றும் அனைத்து வகையான திரவ மதுசாரங்களும் பரிமாறுவதற்கான அங்கீகாரம் தொடாபான ஒழுங்குவிதிகளை ஏற்பாடு செய்தல். |
| **துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு** | |
| **24.11.2010** | 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் (2010.11.24 ஆம் திகதிய 1681/33 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) – 2010.11.24 ஆம் திகதியிலிருந்து குறிப்பீடு செய்யப்பட்ட பொருட்களுக்கான கொடுப்பனவுகளுக்கு விலக்களிப்பு வழங்குதல். |
| **17.01.2011** | 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் (2011.01.17 ஆம் திகதிய 1689/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) – வளர்க்கும் நோக்கத்திற்காக பால் விலங்கினங்கள் பால் கறக்கும் இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் மீதான துறைமுக விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டினை விலக்களிப்பு செய்தல். |
| **25.04.2011** | 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் (2011.04.25 ஆம் திகதிய 1703/1 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.) |
| **உள்நாட்டு இறைவரிச் சட்டம்** | |
| **01.01.2011** | 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 212 ஆவது பிரிவின் கீழான ஒழுங்குவிதி (2011.01.01 ஆம் திகதிய 1686/55 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) செயற்படுத்துகை காலத்தினை அறிவித்தல். |
| **03.06.2011** | 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 17 அ ஆவது உப பிரிவின் கீழான கட்டளை (2011.06.03 ஆம் திகதிய 1708/34 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) சட்டத்தின் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட செயற்பாடுகளை வரையறுத்தல். |
| **நிலுவை வரி** | |
| **31.03.2011** | 2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க நிலுவை வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 1 ஆம் பிரிவின் கீழான கட்டளை (2011.03.31 ஆம் திகதிய 1699/44 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) 2011.04.01 ஆம் திகதி உள்ளவாறு சட்டத்தினை செயற்படுத்தும் திகதி பற்றிய அறிவித்தல் |
| **பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம்** | |
| **25.02.2011** | பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் (2011.02.25 ஆம் திகதிய 1694/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) |

## அரசாங்க செலவினம்

- 2011 இன் முதல் நான்கு மாதங்களின் போது அரசாங்கத்தின் மொத்தச் செலவினம் ரூபா 458, 503 மில்லியனாகும். இது 2010 இல் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 11.6 சதவீத அதிகரிப்பாகும். இது மீண்டெழும் செலவினமான ரூபா 360, 283 மில்லியனையும் அரசாங்க முதலீடாக ரூபா 103, 948 மில்லியனையும் உள்ளடக்கி இருந்தது. மின் உற்பத்தி, துறைமுகங்கள் பாதை மற்றும் நீர்ப்பாசனம் போன்ற துறைகளில் பிரதான அபிவிருத்தி கருத்திட்டங்களின் குறைந்த வட்டிச் செலவினம் தொடர்பான நன்மை காரணமாக மீண்டெழும் செலவினத்தில் 10.2 சதவீத அதிகரிப்பொன்று மாத்திரமே காணப்பட்டதுடன் கிராமிய அபிவிருத்தி முன்னெடுப்புகள் இக்காலப்பகுதியின்போது அரசாங்க முதலீடு மீதான செலவின அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்தது.

**அட்டவணை 1.9**

**அரசாங்க செலவினங்களின் செயலாற்றுகை (ஜனவரி – ஏப்ரல்)**

ரூபா மில்.

| | 2010 | 2011 (Pro) |
|---|---|---|
| **நடைமுறைச் செலவினம்** | **327,041** | **360,283** |
| சம்பளங்களும் வேதனாதிகளும் | 98,867 | 108,218 |
| வட்டி | 138,205 | 142,284 |
| சமுர்த்தி | 3,080 | 3,100 |
| உர மானியம் | 2,596 | 5,625 |
| ஓய்வூதியம் | 28,640 | 32,238 |
| ஏனைய செலவினம் | 55,653 | 68,818 |
| **பொது முதலீடுகள்** | **89,114** | **103,948** |

*மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

### சம்பளங்கள் மற்றும் ஓய்வூதிய செலவினங்கள்

- அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளங்கள் மீதான செலவினம் ரூபா 108,218 மில்லியனாக காணப்பட்டதுடன் இது முன்னைய வருடத்தின் இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 9.5 சதவீத அதிகரிப்பொன்றாகும். அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் அவர்களது சம்பளத்தில 5 சதவீத விசேட கொடுப்பனவு வழங்கியமை மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 600 ரூபாவிலிருந்து 5,850 ரூபா வரை பதவி நிலையல்லாத வகுப்பைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களுக்கும் வழங்கியமை இந்த அதிகரிப்பிற்கு காரணமாகும்.

- அதேவேளை மொத்த ஓய்வூதியக் கொடுப்பனவானது இக்காலப்பகுதியில் ரூபா 32,238 மில்லியனால் அதிகரித்ததுடன் 2010 இன் இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 12.6 சதவீத அதிகரிப்பாகும். 2010 இல் ஓய்வூதியம் பெற்றவர்களின் முழுமையான தாக்கம் அத்துடன் 2011 இன் முதல் நான்கு மாதங்களின் போது ரூபா 300 இலிருந்து ரூபா 2,675 ஆக புதிய ஓய்வூதியம் பெறுநர்களின் வருகை என்பன இந்த அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்தது.

**வட்டிச் செலவு**

- வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூபா 142,284 மில்லியனாக அதாவது முன்னைய வருடங்களில் ஏற்பட்ட அதிகரிப்பினை விட 3 சதவீத அதிகரிப்பு மாத்திரமே காணப்படுகின்றது. அரசாங்கத்தின் பிணையங்களின் மீது குறைந்த வட்டி விகிதங்கள் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியதுடன் இம் முன்னேற்றத்திற்கு இவை பிரதான பங்கு வகித்துள்ளது.

**அட்டவணை 1.10**

**விளைவு விகித பாங்கு (%): 2010-2011**

| காலம் | திறைசேரி உண்டியல்கள் | | | திறைசேரி முறிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | 2 வருடம் | 3 வருடம் | 4 வருடம் | 5 வருடம் |
| 2010 ஏப்ரல் | 8.48 | 9.20 | 9.42 | - | - | - | - |
| 2010 யூலை | 7.98 | 8.80 | 9.17 | - | - | 9.64 | 9.62 |
| 2010 ஒக்டோபர் | 7.11 | 7.25 | 7.20 | - | 8.28 | - | 8.80 |
| 2010 டிசெம்பர் | 7.26 | 7.38 | 7.55 | - | 8.36 | 8.60 | 8.76 |
| 2011 ஜனவரி | 7.04 | 7.09 | 7.33 | - | 6.03 | 8.20 | 6.57 |
| 2011 பெப்ரவரி | 6.99 | 7.08 | 7.33 | 7.77 | 7.99 | - | 8.49 |
| 2011 மார்ச் | 6.97 | 7.05 | 7.33 | - | - | 8.20 | - |
| 2011 ஏப்ரல் | 7.00 | 7.10 | 7.31 | - | - | - | - |
| சதவீத மாற்றம் (2010 ஏப் - 2011 ஏப்) | (1.48) | (2.10) | (2.11) | - | - | - | - |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

**பாதிக்கப்பட்ட குழுக்களுக்கு நலன்புரிக் கொடுப்பனவுகளும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பும்**

- 2011 இன் முதல் ஐந்து மாதங்களின்போது நலன்புரிக் கொடுப்பனவுகள் மற்றும் உதவு தொகைகளின் மீதான மொத்தச் செலவினம் கடந்த வருடத்தின் இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 37 சதவீத அதிகரிப்பினை அதாவது ரூபா 23,648 மில்லியன் அதிகரிப்பு காணப்பட்டது. இவற்றுள் சமூகத்திலுள்ள வறியவர்களுக்கான ஒத்துழைப்பாக வழங்கப்பட்ட நலன்புரி உதவிகள், அங்கவீனமுற்றவர்கள், அங்கவீனமுற்ற படைவீரர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குழுக்களுக்கான ஒத்துழைப்பாக ரூபா 11,294 மில்லியன் காணப்பட்டது.

- தாய் மற்றும் சிறுவர் நலன்புரிச் சேவையினை மேம்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய சுகாதார நிகழ்ச்சித் திட்டம் இக்காலப்பகுதியின்போது தொடர்ந்து இடம் பெற்றது. இதற்கமைவாக "போஷண மல்ல" நிகழ்ச்சித் திட்டம் கற்பிணித்தாய்மார்கள் மற்றும் பாடசாலைச் சிறுவர்களுக்கான போஷாக்குணவு நிகழ்ச்சித் திட்டத்தினை மேம்படுத்துவதுடன் ரூபா 103 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்டதுடன் பாடசாலைகளுக்கான போஷாக்குணவு நிகழ்ச்சித் திட்டம் 2011 இன் முதல் ஐந்து மாதங்களின்போது 818 மில்லியனாக தொடர்ந்தும் பேணப்பட்டது. அதேவேளை 463 மில்லியன் ரூபா உணவு ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக அதாவது உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் இக்காலபகுதியின்போது 1,270 மில்லியன் செலவினத்தினை உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து மேற்கொண்டது.

- இலவச பாடப்புத்தகங்கள் வழங்குதல், சீருடைகள், பருவச் சீட்டுக்கள் மற்றும் இலவச தர்ம பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் உதவுத்தொகைகள் என்பன வழங்கும் திட்டம் ரூபா 2,234 மில்லியன் செலவினத்தில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- அங்கவீனமுற்ற படையினருக்கான உதவியாக ரூபா 5,499 மில்லியன் செலவினமாக தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டதுடன் வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இராணுவ வீரர்களுக்கான நிகழ்ச்சித் திட்டமொன்று இக்காலப்பகுதியின்போது ரூபா 125 மில்லியன் செலவினத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதில் 69 மில்லியன் சமைக்கப்பட்ட உணவுகள் மற்றும் உள்நாட்டில் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கான நலன்புரி உதவியாக வழங்கப்பட்டது.

- உர மானியத்திட்டத்தின் கீழ் 2011 இன் முதல் ஐந்து மாதங்களின் போது ரூபா 11,876 மில்லியனை அரசாங்கம் செலவிட்டுள்ளது. இதற்கமைவாக விவசாயிகளுக்கான அனைத்து வகையான உரங்களும் 50 கி.கிராம் பொதியொன்று ரூபா 350 இற்கு வழங்கப்பட்ட அதேவேளை சிறிய தேயிலை உற்பத்தியாளர்களுக்கு யூரியா 50 கி.கிராம் பொதியொன்று ரூபா 1,000 இற்கு வழங்கப்பட்டது.

**அட்டவணை 1.11**

**நலன்புரி கொடுப்பனவுகளும் உதவுதொகைகளும் (ஜனவரி – மே)**

ரூபா மில்.

| விடயம் | **2010** | **2011** |
|---|---|---|
| **தாய் மற்றும் சிறுவர்** | | |
| குழந்தை பால் மா உதவுதொகை | 32 | 41 |
| போஷண மல்ல | 85 | 103 |
| திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம் | 170 | 422 |
| இலவச பாடப்புத்தகம் மற்றும் சீருடைகள் | 964 | 1,407 |
| பாடசாலை பருவச் சீட்டுக்கள் | 192 | 549 |
| சமய பாடசாலை பாடப்புத்தகங்களும் சீருடைகளும் | 52 | 189 |
| பாடசாலை போஷாக்கு உணவு | 433 | 818 |
| **விவசாயம்** | | |
| விவசாயக் கடன் வட்டி உதவுதொகை | 165 | 60 |
| உர மானியம் | 4,317 | 11,876 |
| **நலன்புரிக் கொடுப்பனவுகள்** | | |
| சமுர்த்தி நிவாரணம் | 4,350 | 3,922 |
| அங்கவீனமுற்ற படையினருக்கான உதவி | 3,967 | 5,499 |
| உலக உணவுத்திட்ட உதவி | 1,677 | 1,270 |
| வெள்ளம் மற்றும் வரட்சி நிவாரணம் | 709 | 69 |
| குழந்தை பால் மா உதவுதொகை | 92 | 409 |
| யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்திற்கான நலன்புரி | - | 125 |

*மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

### அரசாங்க முதலீட்டுச் செலவினம்

- கம நெகும, மக நெகும, வடக்கின் வசந்தம் மற்றும் பிற அபிவிருத்தி முன்னெடுப்புகளை ஊக்குவிப்பதன் ஊடாக கிராமியத் துறையினை இலக்காகக் கொண்ட துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களிற்காக அரசாங்க முதலீடுகளை வழங்கும் வகையில் அரசாங்கம் தொடர்ந்தும் அதிக வளங்களை வழங்கி வருகின்றது. பாதைகள், பாலங்கள், துறைமுகம், மின் உற்பத்தி, நீர்ப்பாசனம் உள்ளடங்கிய தேசிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களின் பெறப்பட்ட அபிவிருத்தி தொடர்ந்தும் பேணப்பட்டது. 2011 ஜனவரி – ஏப்ரல் காலப்பகுதியில் மொத்த அரசாங்க முதலீடு ரூபா 104 பில்லியனாகக் காணப்பட்டது.

### கிராமிய அபிவிருத்தி முன்னெடுப்புகள்

- மக நெகும நிகழ்ச்சித் திட்டமான நாடளாவிய கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மீதான செலவினம் 2011 ஜனவரி – மே காலப்பகுதியில் ரூபா 939 பில்லியனாக இருந்தது. இக்காலப்பகுதியில் ஏறக்குறைய 156 கி.மீற்றர் கிராமியப் பாதைகள் புதிய தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி புனரமைக்கப்பட்டதுடன் உள்ளூர் பொருளாதார செயற்பாடுகளை ஊக்குவிக்கும் தடைகளை இல்லாதாக்குவதாகும். மேலும் 340 பாலங்கள், மேம்பாலங்கள், மதகுகள் மற்றும் பாதைகள் என்பன நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் 26,314 குடும்பங்கள் நன்மையடைந்துள்ளன.

### திவி நெகும

- பின்தங்கிய பொருளாதாரத்தைக் கொண்ட குடும்பங்களை வலுவூட்டுவதை இலக்காகக் கொண்ட 1 மில்லியன் வீட்டுப் பொருளாதார நிகழ்ச்சித் திட்டமே இதுவாகும்.

## அட்டவணை 1.12

## மக நெகும கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (2010 ஜனவரி – மே)

| மாவட்டம் | கருத்திட்டங் களின் எண்ணிக்கை | பூரணப்படுத்தப்பட்ட மொத்தப் பாதை நீளம் (கி.மீ) | பாலங்கள்/ மேம்பாலங்கள்/ மதகுகள்/ அடிப்பாதைகள் (இல.) | தடுப்புச் சுவர் ($m^2$) | செலவினம் (ரூபா மில்.) | பயன்பெறும் குடும்பங்கள் (இல.) |
|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 119 | 7.61 | 1 | 387 | 56 | 3,374 |
| கம்பஹா | 69 | 6.06 | 2 | 121 | 36 | 1,838 |
| களுத்துறை | 90 | 5.51 | 35 | 130 | 45 | 1,724 |
| கண்டி | 70 | 5.52 | 1 | 161 | 32 | 736 |
| மாத்தளை | 65 | 7.46 | - | 145 | 35 | 739 |
| நுவரெலியா | 13 | 1.54 | - | - | 6 | 98 |
| காலி | 46 | 3.95 | 1 | 38 | 22 | 562 |
| மாத்தறை | 368 | 30.27 | 32 | 823 | 171 | 3,831 |
| ஹம்பாந்தோட்டை | 204 | 15.43 | 29 | 73 | 98 | 2,187 |
| யாழ்ப்பாணம் | - | - | - | - | - | - |
| மன்னார் | 1 | 1.01 | - | - | 5 | 75 |
| வவுனியா | 2 | 0.76 | - | - | 3 | 70 |
| முல்லைத்தீவு | - | - | - | - | - | - |
| கிளிநொச்சி | - | - | - | - | - | - |
| மட்டக்களப்பு | 16 | 0.36 | 10 | - | 11 | 347 |
| அம்பாறை | 80 | 2.85 | 52 | - | 30 | 672 |
| திருகோணமலை | 10 | 0.78 | - | - | 6 | 152 |
| குருநாகல் | 334 | 27.73 | 70 | - | 147 | 3,886 |
| புத்தளம் | 67 | 5.96 | 1 | 24 | 35 | 766 |
| அனுராதபுரம் | 54 | 3.64 | 24 | 32 | 23 | 646 |
| பொலன்னறுவை | 96 | 8.44 | 4 | - | 44 | 1,003 |
| பதுளை | 27 | 2.4 | 3 | - | 14 | 298 |
| மொனறாகலை | 124 | 4.56 | 70 | 95 | 37 | 1,332 |
| இரத்தினபுரி | 104 | 8.08 | 4 | 214 | 49 | 1,212 |
| கேகாலை | 68 | 6.01 | 1 | 202 | 34 | 766 |
| **மொத்தம்** | **2,027** | **155.93** | **340** | **2,445** | **939** | **26,314** |

*மூலம்: வீதி அபிவிருத்தி அதிகாரசபை.*

- அதேநேரம், பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்த கிராமங்களை உருவாக்குவதன் ஊடாக கிராமிய பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்கான பிரதான முன்னெடுப்பே கம நெகும ஆகும். இது 2011 இன் முதல் ஐந்து மாதங்களின்போது ரூபா 1,153 மில்லியனை செலவினமாக கொண்டிருந்தது.

## அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மீதான செலவினம்

### உட்கட்டமைப்பு அபிவிருத்தி

#### பாதைகள்

- பாதைத் துறை மீதான முதலீடு 2011 ஜனவரி – மே காலப்பகுதியின்போது ஏறக்குறைய ரூபா 19,479 மில்லியனாக இருந்தது. இது கடுகதிப் பாதை அபிவிருத்தி மீதான ரூபா 4,279 மில்லியன் மற்றும் நாடு முழுவதிலுமுள்ள அபிவிருத்தி பெருந்தெருக்கள் மீதான ரூபா 8,914 மில்லியனையும் உள்ளடக்கியிருந்தது. அதேவேளை மாகாணப் பாதைகள் விரிவாக்கல் மற்றும் மேம்பாடு மீதான ரூபா 4,861 மில்லியன், பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் நிர்மாணம் மீதான ரூபா 524 மில்லியன் அத்துடன் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பாதைப் புனரமைப்பிற்காக ரூபா 898 மில்லியன் என்பனவும் இக்காலப்பகுதியின்போது செலவிடப்பட்டுள்ளன. அத்துடன் மக நெகும மற்றும் கம நெகும நிகழ்ச்சித் திட்டகளினூடாக கிராமியப் பாதை அபிவிருத்திக்காக முறையே ரூபா 939 மில்லியன் மற்றும் ரூபா 1,153 மில்லியன் என்பன செலவிடப்பட்டுள்ளன.

#### துறைமுகங்கள்

- தற்பொழுது மூன்று பிரதான துறைமுகக் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவை கொழும்பு தெற்கு துறைமுகக் கருத்திட்டம், ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் ஒலுவில் துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் என்பன துறைமுக வசதிகளை வழங்குவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதாகும். விசேடமாக 2011 ஜனவரி – மே காலப்பகுதியில் கொழும்பு தெற்கு துறைமுகக் கருத்திட்டத்திற்காக ரூபா 88 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக ரூபா 320 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. ஒலுவில் துறைமுக அபிவிருத்தி கருத்திட்டமும் இம்மீளாய்வு காலப்பகுதியின்போது தொடர்ந்து இடம் பெற்றது.

#### மின் வலு எரிசக்தி

- 2012 இல் 100 சதவீத மின் வழங்களினை உறுதிப்படுத்தும் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக ரூபா 3,066 மில்லியன் 2011 இன் முதல் ஐந்து மாதங்களின்போது மின் துறை அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டுள்ளது. இம்முதலீட்டில் ரூபா 2,256 மில்லியன் நாட்டில் மின் உருவாக்கல் மேம்பாட்டிற்காக செலவிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக ரூபா 627 மில்லியன் மின்சார பகிர்வு வசதிகளை விரிவாக்குவதற்காகவும் ரூபா 183 மில்லியன் மின்சார இணைப்பு முறைமையினை அபிவிருத்தி செய்வதற்காகவும் இக்காலப்பகுதியின்போது முதலீடு செய்யப்பட்டது.

## நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம்

- மொறகஹகந்த, களுகங்கை நீரேந்து கருத்திட்டங்களின் கீழ் அணைக்கட்டு நிர்மாணப் பணிகள் அதேபோன்ற சமூக மற்றும் நீர்ப்பாசன உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்பாடுகள் 2011 இன் முதல் ஐந்து மாதங்களின்போது மேற்கொள்ளப்பட்டது. இவை பாதை வலையமைப்பு, பிற உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் மீள்குடியேற்றத்திற்கான காணி சுவீகரிப்பு என்பவற்றினையும் உள்ளடக்கியிருந்தது. 2011 இன் ஜனவரி – மே காலப்பகுதியில் இக்கருத்திட்டத்திற்காக ரூபா 335 மில்லியன் செலவிடப்பட்டது.

- 529 மில்லியன் ஐ.அ.டொலர் செலவில் ஈரானின் உதவியின் கீழ் 2009 இல் ஆரம்பிக்கப்பட்ட உமா ஓயா திசை திருப்பல் கருத்திட்டம் பதுளை, மொனறாகலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் 15,000 ஏக்கர்கள் விவசாயம் செய்வதற்கும் அதன் மூலம் 12,000 விவசாயிகள் நன்மை பெறும் அதேநேரம் நீர் மின் உற்பத்தி மூலம் வருடந்தோறும் 312 ஜிகாவோட் மின் உற்பத்தி செய்யப்படுவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. 2011 மே 31 ஆம் திகதி இறுதிவரை திரட்டிய செலவினம் ரூபா 9,363 மில்லியனாக இருந்ததுடன் 2011 ஜனவரி – மே காலப்பகுதியில் ரூபா 3,036 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

- குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் 8,500 ஹெக்டேயர் தற்பொழுதிருக்கும் காணிகளுக்கும் புதிதாக 1,500 ஹெக்டேயர் காணிக்கும் நீர்ப்பாசனம் செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட தெதறு ஓயா நீரேந்து கருத்திட்ட நிர்மாணம் மற்றும் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நீர் மின் உற்பத்தி மற்றும் அணைக்கட்டு நிர்மாணம் இடது மற்றும் வலது கரை மதகுகள், கால்வாய்கள் மற்றும் நீரேந்து நிலைகள் என்பன நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. 2011 மே 31 வரை திரட்டிய செலவினம் ரூபா 2,838 மில்லியனாகும்.

- 32 பாரிய அணைக்கட்டுகளின் பாதுகாப்பு மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறனை உறுதிப்படுத்துவதனை இலக்காகக் கொண்டு உலக வங்கி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டம் புதிய தொழினுட்ப தகவல் முறைமையுடன் நாட்டிற்கு தேவையான நீர் வளங்களினை திட்டமிடுவதற்காக 2011 இலும் தொடரப்பட்டது. 2011 ஜனவரி – மே வரைக்குமான செலவினம் ரூபா 232 மில்லியன் ஆகும்.

## நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல்

- 2011 இன் முதல் ஐந்து மாதங்களின்போது நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுத் துறை மீதான மொத்தச் செலவினம் ரூபா 12,998 மில்லியனாகும். இவற்றில் ரூபா 10,599 மில்லியன் பாரியளவு நீர் வழங்கல் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக செலவிடப்பட்டுள்ளது. கழிவு நீரகற்றல் கருத்திட்டம் மீதான முதலீடு மற்றும் நீர் வழங்கல் திட்டங்கள் கரையோரப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டதுடன் இதற்காக செலவிடப்பட்ட தொகை முறையே ரூபா 1,321 மில்லியன் மற்றும் ரூபா 405 மில்லியனாகும். இதற்கு மேலதிகமாக அதேகாலப்பகுதியில் 47 சிறிய மற்றும் நடுத்தர நீர் வழங்கல் திட்டங்களுக்காக ரூபா 671 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

## அட்டவணை 1.13

## நீர் வழங்கலும் துப்பரவேற்பாடும் (2011 ஜனவரி - ஏப்ரல்)

ரூபா மில்.

| | வெளிநாட்டு நிதி | உள்நாட்டு நிதி | மொத்தம் |
|---|---|---|---|
| **பாரியளவான நீர் வழங்கல் திட்டங்கள்;** அம்பாறை, கண்டி, கொழும்பு, பொலன்னறுவை, மட்டக்களப்பு, மூதூர், ஹம்பாந்தோட்டை, காலி, நுவரெலியா, கடுகண்ணாவ, கெலிஓயா, உடுநுவர, யட்டிநுவர, கம்பளை, பேராதெனை, உலப்பனை, கினிகத்ஹேன, ஹற்றன், மஸ்கெலியா, றாகலை, றிகில்லகஸ்கட, நீர்கொழும்பு மற்றும் லுணுகம்வெஹெர | 7,174.9 | 2,401.6 | 9,566.5 |
| **சிறியளவிலான நீர் வழங்கல் திட்டங்கள்;** தலவாக்கலை - லிந்துல, மெதிரிகிரிய, இப்பலோகம, பெல்மதுல்ல, கந்தளாய், மாகோ, உடவலவை, கலிகமுவ, அக்குறஸ்ஸ, மொனராகலை, ஒஹிய, திஹகொட போன்ற | - | 505.4 | 505.4 |
| **கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள்;** அனுராதபுரம், கொழும்பு, மாத்தறை, இரத்தினபுரி, கம்பஹ, கண்டி, மாத்தளை, நுவரெலியா, அம்பாறை, குருநாகல் மாவட்டம் மற்றும் தோட்டப் பிரதேசங்கள் | 68 | 24 | 92 |
| **கழிவு நீர் திட்டங்கள் ;** மொறட்டுவை, இரத்மலானை, ஜாஎல, ஏகலை, கண்டி மற்றும் கொழும்பு | 708.9 | 341.6 | 1,050.5 |
| மொத்தம் | **7,941.8** | **3,272.5** | **11,214.4** |

*மூலம்: தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை*

## மனித வள அபிவிருத்தி

### கல்வி

- கல்வித்துறையினைப் பொறுத்த வரையில் 2011 இன் முதல் ஐந்து மாதங்களின்போது பொதுக் கல்வித் துறைக்காக ரூபா 11,218 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. மேலும், உயர் கல்வித் துறைக்காக ரூபா 7,778 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு மீதான மூலதனச் செலவினம் 2011 இன் முதல் ஐந்து மாதங்களின்போது ரூபா 2,310 மில்லியனாக இருந்ததுடன் இதேகாலப்பகுதியில் பொதுக் கல்வித்துறையின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ரூபா 812 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

### சுகாதாரம்

- 2011 இன் முதல் ஐந்து மாதங்களின்போது சுகாதார துறை மீதான அரசாங்க செலவினம் 23,440 மில்லியனாக இருந்ததுடன் சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ துறையினையும் இது உள்ளடக்கியிருந்தது. அரசாங்க நிறுவனங்களுக்கு பாதுகாப்பானதும், பயனுறுதிமிக்க மருத்துவ வழங்கல் செய்யும் வகையில் ரூபா 5,861 மில்லியன் மருத்துவ வழங்கல்கள் மீது செலவிடப்பட்டதுடன் 2011 ஜனவரி – மே வரைக்கும் வைத்தியசாலைகளின் மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூடப் பொருட்களுக்காக ரூபா 430 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

- மாத்தறை கொடகமையில் இலங்கை – கொரியா நட்பு வைத்தியசாலையில் பிரசவ மற்றும் சிறுவர் மருத்துவ வாட்டு நிர்மாணம் கட்டம் - 1 போன்ற வெளிநாட்டு நிதிக் கருத்திட்டங்கள், கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அவசர மற்றும் நரம்பியல் நிலையத்தினை தாபித்தல், அனுராதபுர பொது வைத்தியசாலையில் சுகாதாரப் பராமரிப்பு சேவைகள் மேம்படுத்தல் மற்றும் குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்குதல் அத்துடன் பிற அத்தியாவசிய வைத்தியசாலைகளை நிறுவுதல் என்பன இக்காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

## அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் செயலாற்றுகை

- 2011 இன் முதல் ஐந்து மாதங்களின்போது அரசாங்க திறைசேரிக்கான காசு உட்பாய்ச்சல் 2010 இன் இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 18 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களுக்கான வெளிப்பாய்ச்சலின் பின்னர் காசுப் பற்றாக்குறை ரூபா 191.3 பில்லியனாக இருந்ததுடன் இது 2010 இல் காணப்பட்ட ரூபா 7.5 பில்லியனை விட மிக அதிகமானதாகும். இது மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்கள் முன்னைய வருடத்தில் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் முறையே 9 சதவீதம் மற்றும் 24 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டதன் விளைவாகும். மொத்த காசு மீதி (பற்றாக்குறை) 2011 மே மாத இறுதியில் ரூபா 95.3 பில்லியனாக இருந்ததுடன் 2010 மே இறுதியில் காணப்பட்ட காசுப் பற்றாக்குறையான ரூபா 11.4 பில்லியனை விட அதிகமாகும்.

**அட்டவணை 1.14**

**அரசாங்க காசுப்பாய்ச்சல் தொழிற்பாடுகள் மீதான கூற்று**
**(ஜனவரி முதல் மே வரை)**

| வியடம் | 2010 | 2011 | |
|---|---|---|---|
| | ஜனவரி - மே | ஜனவரி - மே | |
| | மெய் | மதிப்பீடு | மெய் |
| வருமானத்திலிருந்து மொத்த காசு உட்பாய்ச்சல் | 295,687 | 359,080 | 347,754 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளுக்காக மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | -373,825 | -420,122 | -408,320 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளுக்காக தேறிய காசுப் பாய்ச்சல் | -105,709 | -119,718 | -130,795 |
| முதலீட்டு செயற்பாடுகளுக்கான காசுப் பாய்ச்சல் | -183,847 | -180,760 | -191,361 |
| தேறிய காசு மிகை (பற்றாக்குறை) | -75,969 | -86,809 | -86,809 |
| ஆரம்ப காசு மீதி | 308,370 | 396,820 | 410,722 |
| மொத்தப் பெறுகைகள் | -134,536 | -219,522 | -231,340 |
| படுகடன் கொடுப்பனவுகள் | 173,834 | 177,298 | 179,382 |
| தேறிய பெறுகைகள் | 1,999 | | 3,479 |
| சரிபடுத்தல் கணக்கு மீதி (ரிசுபி,ஆர்எவ்ஏ,வைப்புக்கள்) | **-83,983** | **-90,271** | **-95,309** |

* 2011 யூன் 20 அன்றுள்ளவாறு அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கருத்திட்ட மற்றும் நிகழ்ச்சித் திட்டக் கடன்கள் உள்ளடங்கலாக.

## அரசாங்க படுகடன் முகாமை

- 2011 இன் முதல் ஐந்து மாதங்களின்போது அரசாங்கப் படுகடன் தொழிற்பாடுகள் மொத்த படுகடனாக ரூபா 410.7 பில்லியனை சுட்டிக் காட்டியது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு படுகடன் மீதான மீள் கொடுப்பனவு ரூபா 231.3 பில்லியனாக இருந்ததுடன் இக்காலப்பகுதியின் போது வரையறுக்கப்பட்ட தேறிய கடன் பெறுகை ரூபா 179.3 பில்லியனாகக் காணப்பட்டது.

# அத்தியாயம் 2

# பொருளாதாரம்

## பொருளாதார வளர்ச்சி - 2011 முதற் காலாண்டு

- பொருளாதார வளர்ச்சியானது 2011 இன் முதற் காலாண்டில் 7.9 சதவீதமாகக் காணப்பட்டதுடன் இது 2010 இல் இதே காலப்பகுதியில் 7.1 சதவீதத்தினைப் பதிவாக்கியது. 2011 இன் முதற் காலாண்டில் இந்த வளர்ச்சி மட்டம் சில உப துறைகளான நெல், தெங்கு மற்றும் பிற உணவுப் பயிர்கள் என்பன வருடத்தின் ஆரம்பத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டதன் விளைவாக விவசாயத் துறையில் 5.1 சதவீத எதிர்மறை விளைவினை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

- எவ்வாறாயினும், கைத்தொழிற் துறையானது உற்பத்தி, சுரங்கமறுத்தல் அகழ்வு, மின் உற்பத்தி மற்றும் நிர்மாண உப துறைகளில் சிறந்த செயலாற்றுகை காரணமாக 2011 இன் முதல் காலாண்டின்போது 11.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மொத்த மற்றும் சில்லறைவியாபாரம், ஹோட்டல்கள் அத்துடன் சிற்றுண்டிச்சாலைகள், போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு, வங்கித்தொழில் மற்றும் காப்புறுதி அத்துடன் தனியார் சேவைகள் போன்ற உப துறைகளின் செயலாற்றுகை குறித்த காலப்பகுதியில் மேம்பாடடைந்ததன் காரணமாக சேவைத்துறையானது 9.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

## பணவீக்கம்

- புள்ளிக்கு புள்ளி பணவீக்கம் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் அளக்கப்பட்ட சதவீத மாற்றத்தின்படி (அடிப்படை வருடம் 2006/2007= 100) 2011 ஏப்ரலில் 8.9 சதவீத உயர் விகிதத்திலிருந்து யூனில் 7.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இது குறித்த வருடத்தில் முதல் இரண்டு மாதங்களில் உற்பத்தி பிரதேசங்களில் வெள்ள அனர்த்தம் காரணமாக மரக்கறிகளின் விலைகளில் அழுத்தம் ஏற்பட்டு வழங்கல் தாமதமடைந்ததனால் ஏற்பட்டதாகும்.

- அதேநேரம் புதிய உணவு, சக்தி, போக்குவரத்து, அரிசி மற்றும் தெங்கு நீங்கலாக விலை அசைவானது மத்திய பணவீக்கத்தில் 8.7 சதவீத கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணாக 2011 யூனில் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் காணப்பட்டது.

### அட்டவணை 2.1

### இலங்கையில் தலைப்பு மற்றும் மத்திய பணவீக்கம் *

| மாதம்/வருடம் | தலைப்பு பணவீக்கம் (%) | மத்திய பணவீக்கம் (%)** |
|---|---|---|
| ஜனவரி 2010 | 7.1 | 8.0 |
| பெப்ரவரி | 7.5 | 8.1 |
| மார்ச் | 7.2 | 7.5 |
| ஏப்ரல் | 6.8 | 7.1 |
| மே | 5.6 | 5.7 |
| யூன் | 5.1 | 5.7 |
| யூலை | 4.4 | 5.5 |
| ஆகஸ்ட் | 5.0 | 6.0 |
| செப்டெம்பர் | 5.7 | 6.2 |
| ஒக்டோபர் | 6.5 | 7.2 |
| நவம்பர் | 6.9 | 7.9 |
| டிசம்பர் | 6.8 | 8.9 |
| ஜனவரி 2011 | 6.2 | 6.5 |
| பெப்ரவரி | 7.2 | 5.7 |
| மார்ச் | 7.7 | 6.6 |
| ஏப்ரல் | 8.9 | 7.6 |
| மே | 8.2 | 8.4 |
| யூன் | 7.1 | 8.7 |

* அடிப்படை வருடம்: 2006/07=100

** உணவு, சக்தி, போக்குவரத்து, அரிசி மற்றும் தேங்காய்.

*மூலம்: சனத்தொகைப் புள்ளி விபரத் திணைக்களம்*

### வரைபு 2.1



**பங்குச் சந்தை**

- பேரண்டப் பொருளாதார சூழ்நிலையில் பங்குச் சந்தையானது தொடர்ந்து சாதகமான வளர்ச்சிப் போக்கினைக் கொண்டிருந்ததுடன் வட்டி விகிதம் குறைவடைந்தமை, உயர்ந்த வியாபார நம்பிக்கை மற்றும் பயங்கரவாத பிரச்சினைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதனை தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி என்பன இதற்குக் காரணமாகும்.
- அனைத்து பங்கு விலைச் சுட்டி 2011 மே இறுதியில் சராசரியாக 7,418.1 ஆகக் காணப்பட்டது. இது 2011 மே மாதத்துடன் ஒப்பிடுகையில் 75 சதவீத அதிகரிப்பாகும். அதேநேரம் மிலங்கா விலைச் சுட்டியானது 43 சதவீதத்தினால் அதிகரித்து 6,853.6 இனை நெருங்கியது. சராசரிப் புரள்வானது ரூபா 3,470.3 மில்லியன் அதிகரிப்பொன்றினை அதாவது 2010 மே இறுதியில் காணப்பட்டதனை விட 91 சதவீத அதிகரிப்பாகும். 2011 மே இறுதியில் சந்தை மூலதனமயமாக்கல் ரூபா 2,515 பில்லியனாக இருந்தது. இது 2010 இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 83 சதவீத அதிகரிப்பொன்றாகும்.

**அட்டவணை 2.2**

**மூலதன சந்தையில் அசைவு**

| சுட்டி | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | ஏப்ரல் இறுதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2010 | 2011 |
| அ. பங்கு விலைச் சுட்டி (1985=100) | 2,722 | 2,541 | 1,503 | 3,386 | 3,385 | 4,189 | 7,357 |
| மிலங்கா விலைச் சுட்டி | 3,712 | 3,292 | 1,631 | 3,849 | 3,849 | 4,712 | 6,823 |
| சந்தை மூலதனம் (ரூபா மில்.) | 835 | 821 | 489 | 1,092 | 2,210 | 1363 | 2,487 |
| வர்த்தகத்தில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 232 | 231 | 232 | 231 | 241 | 231 | 247 |
| வருடாந்த சராசரி புரள்வு (ரூபா பில்.) | 115 | 105 | 105 | 110 | 2,396 | 1,540 | 1,953 |
| வெளிநாட்டு விற்பனைகள் (ரூபா மில்.) | 31,790 | 35,543 | 52,682 | 43,846 | 118,761 | 28,480 | 29,094 |
| வெளிநாட்டு கொள்வனவு (ரூபா மில்.) | 37,167 | 46,797 | 66,632 | 43,057 | 92,426 | 15,004 | 20,748 |

*மூலம்: கொழும்பு பங்குச் சந்தை*

**வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்**

- பயங்கரவாதம் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னணியில் முதலீட்டாளர் நம்பிக்கை, சாதகமான மனோநிலை என்பன அதிகரிக்கப்பட்டு வெளிநாட்டு கேள்வி மேம்பாடடைந்ததன் காரணமாக 2011 இன் முதல் காலாண்டின் போது வெளிநாட்டுத்துறையின் செயலாற்றுகை தொடர்ந்தும் அதிகரித்தது. ஏற்றுமதிகளிலிருந்து வருமானம் 54.3 சதவீதத்தினால் அதாவது 2011 இன் முதற் காலாண்டில் 2,721 மில்லியன் ஐ.அ.டொலர்களாக அதிகரித்தது. உள்நாட்டுப் பொருளாதார செயற்பாடுகள் அதிகரித்த காரணத்தினால் இறக்குமதிச் செலவினமும் 39.9 சதவீதத்தினால் அதாவது 4,458 மில்லியன் ஐ.அ.டொலர்களாக அதிகரித்தது. அத்துடன் 2011 இன் முதல் மூன்று மாதங்களின்போது வர்த்தகப்

பற்றாக்குறையானது 2010 இன் அதே காலப்பகுதியில் காணப்பட்ட 1,424 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 1,737 ஐ.அ.டொலர்களாக அதிகரித்தது. கணக்குச் சேவைகள் மீதான உட்பாய்ச்சல், சுற்றுலா மற்றும் துறைமுகம் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் தொழிலாளர் அனுப்புகைகள் இக்காலப்பகுதியில் விசேடமாக அதிகரித்தன. அதேநேரம் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் 2011 ஏப்ரல் மாதத்தில் 7,164 மில்லியன் ஐ.அ.டொலர்களாக அதாவது 5.6 மாத இறக்குமதிகளுக்கு சமமானதாகக் காணப்பட்டது.

**ஏற்றுமதிகள்**

- 2011 இன் முதல் காலாண்டின் போது ஏற்றுமதி வருமானங்கள் 2010 இல் காணப்பட்ட 1,763 மில்லியன் ஐ.அ.டொலர்களுடன் ஒப்பிடுகையில் 2,721 மில்லியன் ஐ.அ.டொலர்களாக அதாவது 54.3 சதவீதத்தினால் அதிகரித்தது. விவசாய ஏற்றுமதி வருமானங்கள் முன்னைய காலத்துடன் ஒப்பிடுகையில் 469 மில்லியன் ஐ.அ.டொலர்களிலிருந்து 2011 இன் முதற் காலாண்டின்போது 593 மில்லியன் ஐ.அ.டொலர்களாக 26 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. தேயிலை ஏற்றுமதி வருமானம் சாதகமான சர்வதேச விலை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பேரில் 21 சதவீதத்தினால் அதிகரித்தது. கைத்தொழில் ஏற்றுமதிகள் இக்காலப்பகுதியில் 2,078 மில்லியன் ஐ.அ.டொலர்களாக 63.8 சதவீதத்தினால் அதிகரித்தது. குறிப்பாக ஆடை மற்றும் தைத்த ஆடைகள் ஏற்றுமதி 2010 இல் 703 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து இக்காலப்பகுதியில் 1,225 ஐ.அ.டொலர்களாக 74.2 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை இறப்பர் உற்பத்திகளின் வருமானம் 2011 இன் முதல் மூன்று மாதங்களின்போது 29.9 சதவீதத்தினால் அதிகரித்தது.

**இறக்குமதிகள்**

- 2011 இன் முதல் மூன்று மாதங்களுக்கான மொத்த இறக்குமதி 4,458 மில்லியனாகக் காணப்பட்டது. இது 2010 இன் இதேகாலப்பகுதியினை விட 39.9 சதவீத அதிகரிப்பாகும். நுகர்வுப் பொருட்கள் இறக்குமதி 1,003 மில்லியன் ஐ.அ.டொலரினால் அதாவது 35.5 சதவீதத்தினால் அதிகரித்த அதேநேரம் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 2,430 மில்லியன் ஐ.அ.டொலர்களால் 47.4 சதவீதமாக அதிகரித்தது. இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி அதிகரிப்பு காரணமாக உயர் மசகு எண்ணெய் விலை 2010 இன் இதேகாலப்பகுதியினை விட அதிகமாகக் காணப்பட்டது. பெற்றோலிய பொருட்கள் இறக்குமதிச் செலவு 2011 முதற் காலாண்டின்போது 924 மில்லியன் ஐ.அ.டொலர்களாக 29.2 சதவீதத்தினால் அதிகரித்தது. எண்ணெய் அல்லாத இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிச் செலவினம் இக்காலப்பகுதியில் 61 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் குறிப்பாக உள்நாட்டு உற்பத்தித் துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2011 மார்ச்சில் 1,008 மில்லியனாக இருந்ததுடன் இது 2010 இன் இதே காலப்பகுதியில் 692 ஐ.அ.டொலர்களாகக் காணப்பட்டது.

### அட்டவணை 2.3
### வெளிநாட்டு வர்த்தகம் (ஜனவரி - மார்ச்)

ஐ.அ.டொ.மில்.

| வகுதி | 2010 | 2011 |
|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **1,763** | **2,721** |
| விவசாயம் | 469 | 593 |
| தேயிலை | 306 | 370 |
| இறப்பர் | 57 | 74 |
| தெங்கு உற்பத்திகள் | 31 | 47 |
| பிற விவசாய உற்பத்திகள் | 75 | 102 |
| கைத்தொழில் | 1,269 | 2,078 |
| ஆடைகளும் துணிகளும் | 703 | 1,225 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 43 | 139 |
| பிற கைத்தொழில் | 523 | 713 |
| இரத்தினக்கற்கள் | 21 | 24 |
| பிற | 5 | 27 |
| **இறக்குமதிகள்** | **3,188** | **4,458** |
| நுகர்வுப் பொருட்கள் | 740 | 1,003 |
| உணவும் குடிபானமும் | 522 | 557 |
| பிற நுகர்வுப் பொருட்கள் | 219 | 446 |
| நுகர்வுப் பொருட்களல்லாதவை | 1,648 | 2,430 |
| இடைநிலைப் பொருட்கள் | 715 | 924 |
| பெற்றோலியம் | 34 | 56 |
| உர மானியம் | 367 | 596 |
| ஆடைகளும் துணிகளும் | 533 | 854 |
| பிற இடைநிலைப் பொருட்கள் | 692 | 1,008 |
| முதலீட்டுப் பொருட்கள் | 285 | 446 |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | 136 | 244 |
| போக்குவரத்து உபகரணங்கள் | 196 | 220 |
| கட்டிடப் பொருட்கள் | 74 | 99 |
| பிற முதலீட்டுப் பொருட்கள் | **-1,424** | **-1,737** |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

### ஊழியர் அனுப்புகைகள்

- ஊழியர் அனுப்புகைகள் 2011 முதற் காலாண்டில் 1,273.7 மில்லியன் ஐ.அ.டொலர்களாகக் காணப்பட்டது. 2010 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 27.8 சதவீத அதிகரிப்பாகும். வங்கித்தொழில் வசதிகள் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டமையும் இதற்கான முக்கிய காரணமாகும்.

# அத்தியாயம் 3

# வெளிநாட்டு உதவிகள்

- 2011 ஜனவரியிலிருந்து ஏப்ரல் இறுதி வரையிலான காலப்பகுதியில் இலங்கைக்கு கொடைவழங்குனர்கள் மற்றும் கடன் வழங்குனர்களின் மொத்த அர்ப்பணிப்பு 1,385 மில்லியன் ஐ.அ.டொலர்களாக இருந்தது. இதில் கருத்திட்டக் கடன்கள் 1,360.6 மில்லியன் ஐ.அ.டொலர் என்பதுடன் மானியங்கள் 24.4 மில்லியன் ஐ.அ.டொலர்களாகும்.

**அட்டவணை 3.1**
**வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புகள் (2011 ஜனவரி – ஏப்ரல்)**

ஐ.அ.டொ.மில்

| கொடைவழங்குனர் | தொகை |
|---|---|
| **இருதரப்பு** | **1,176.2** |
| சீனா | 759.8 |
| ஜப்பான் | 413.4 |
| இந்தியா | 3.0 |
| **பல்தரப்பு** | **208.8** |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 89.2 |
| உலக வங்கி | 105.8 |
| ஐ.நா.முகவராண்மைகள் | 13.8 |
| **மொத்தம்** | **1,385.0** |

*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

**வரைபு 3.1**
**உதவி அர்ப்பணிப்புகள்**



## அட்டவணை 3.2

### வெளிநாட்டு அர்ப்பணிப்புகள் - கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் - 2011 ஜனவரி – ஏப்ரல்

| கொடை வழங்குனர் | கருத்திட்டத்தின் பெயர் | கடன் / மானியம் நாணயம் | | கடன் ஐ.அ.டொ | மானியம் ஐ.அ.டொ | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| சீனா | முன்னுரிமைப் பாதைகளின் மேம்பாடும் புனரமைப்பும் | USD | 500.0 | 500.0 | | 500.0 |
| | பின்னதுவ – கோட்டகொட பெருந்தெரு (30 கி.மீ – 45 கி.மீ) | USD | 75.1 | 75.1 | | 75.1 |
| | கோட்டகொட- கொடகம பெருந்தெரு (45 கி.மீ – 61 கி.மீ) | USD | 63.1 | 63.1 | | 63.1 |
| | நாவற்குழி – காரைத்தீவு – மன்னார் வீதி 67 கி.மீ. புனரமைப்பும் மேம்பாடும் | USD | 48.4 | 48.4 | | 48.4 |
| | புத்தளம் - மரிச்சுக்கட்டி – மன்னார் வீதி 113 கி.மீ. புனரமைப்பும் மேம்பாடும் | USD | 73.2 | 73.2 | | 73.2 |
| ஜப்பான் | பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் கட்டம் - 2 | JPK | 31.7 | 391.0 | | 391.0 |
| | வவுனியா – கிளிநொச்சி மின் வழங்கல் கருத்திட்டம் (11) | JPK | 1.4 | 17.5 | | 17.5 |
| | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தொலைக்காட்சி உற்பத்தி உபகரண மேம்பாடு | JPK | 0.0 | - | 0.5 | 0.5 |
| | வசதி குறைந்த விவசாயிகளுக்கான உணவுப் பாதுகாப்புக் கருத்திட்டம் | JPK | 0.4 | - | 4.3 | 4.3 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுக் கருத்திட்டம் ஓசீஆர் | USD | 20.0 | 20.0 | | 20.0 |
| | யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுக் கருத்திட்டம் ஆ.அ.வ | XDR | 44.3 | 69.2 | | 69.2 |
| உணவு மற்றும் விவசாய அமைப்பு | வடக்கில் இடம் பெயர்ந்தவர்களுக்கு அத்தியாவசிய விவசாய பொருட்களை வழங்குதல் | USD | 5.0 | | 5.0 | 5.0 |
| உலக வங்கி | இரண்டாவது மேலதிக நிதியளிப்பு – பாதைத்துறை உதவிக் கருத்திட்டம் | XDR | 63.6 | 103.1 | | 103.1 |
| | வட மாகாண போஷாக்கு மட்டக் கருத்திட்டம் | USD | 2.7 | 0.0 | 2.7 | 2.7 |
| ஐ.நா. முகவராண்மை | தொழிநுட்ப ஒத்துழைப்புக்கான நாட்டு நிகழ்ச்சித் திட்டம் 2010 - 14 | USD | 8.8 | 0.0 | 8.8 | 8.8 |
| இந்தியா | மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாறுமுலை மற்றும் ஒத்தச்சி மடம் தொழில் பயிற்சி நிலையங்களை உருவாக்குவதற்கு வசதியளித்தல். | INR | 134 | 0.0 | 3.0 | 3.0 |
| | **மொத்தம்** | | | **1,360.6** | **24.4** | **1,385.0** |

*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

### அர்ப்பணிப்பு செய்யப்பட்டு செலவிடப்படாத மீதி

- அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வழங்கப்பட்டு செலவிடப்படாத மொத்த மீதி 2011 ஏப்ரல் இறுதியில் 8.6 பில்லியன் ஐ.அ.டொலர்களாகும். இந்த அர்ப்பணிப்புகளுக்கான கருத்திட்டச் செயற்படுத்துகை 2-5 வருட காலப்பகுதிக்குள் இருப்பதுடன் செயற்படுத்துகைக் காலமும் இதே அடிப்படையில் காணப்படுகின்றது. வழங்கப்பட்டு செலவிடப்படாத மீதி தொடர்பான துறை ரீதியான வகுப்பாக்கம் அட்டவணை 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.3**

**துறை ரீதியில் அர்ப்பணிப்பு செலவிடப்படாத மீதி – 2011 ஏப்ரல் இறுதியில்**

| துறை | ஐ.அ.டொ.மில். | % மொத்தம் |
|---|---|---|
| பாதைகளும், போக்குவரத்தும் | 3,170.8 | 36.8 |
| துறைமுகங்கள் | 388.4 | 4.5 |
| நீர் வழங்கலும் துப்பரவேற்பாடும் | 921.8 | 10.7 |
| சுனாமி புனரமைப்பு | 88.4 | 1.0 |
| சுகாதாரம், கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சி | 222.7 | 2.6 |
| மின்வலு சக்தி | 1,092.8 | 12.7 |
| தனியார் துறை அபிவிருத்தி | 87.8 | 1.0 |
| விவசாயம், மீன்பிடி,நீர்ப்பாசனம் மற்றும் காணி | 722.9 | 8.4 |
| கிராமிய அபிவிருத்தி | 79.0 | 0.9 |
| சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் | 118.2 | 1.4 |
| தகவல் தொழினுட்பம், விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் | 25.9 | 0.3 |
| வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி | 19.5 | 0.2 |
| பிணக்கினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனரமைப்பு | 337.8 | 3.9 |
| பிற | 1,330.8 | 15.5 |
| **மொத்தம்** | **8,606.8** | **100.0** |

*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

**வரைபு 3.2**

**துறை அடிப்படையில் வழங்கப்பட்டு செலவிடப்படாத மீதி 2011 ஏப்ரல் இறுதியில்**




**வெளிநாட்டு நிதி செலவிடல்**

- 2011 ஏப்ரல் இறுதி வரைக்குமான மொத்த வெளிநாட்டு நிதிச் செலவினம் 408.5 மில்லியன் ஐ.அ.டொலர்களாகும். மொத்த செலவிடலில் கருத்திட்டக் கடன்கள் மற்றும் மானியங்கள் முறையே 382.5 மில்லியன் ஐ.அ.டொலர் மற்றும் 26.0 மில்லியன் ஐ.அ.டொலர் என்பனவாகும்.

**அட்டவணை 3.4**

**வெளிநாட்டு உதவி செலவிடல் (2011 ஜனவரி – ஏப்ரல்)**

ஐ.அ.டொ.மில்.

| கொடை வழங்குனர் | | கடன் | மானியம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **இருதரப்பு** | அவுஸ்திரியா | 35.6 | - | 35.6 |
| | சீனா | 9.7 | - | 9.7 |
| | டென்மார்க் | 1.0 | 1.2 | 2.2 |
| | பிரான்ஸ் | 55.8 | - | 55.8 |
| | இந்தியா | 108.0 | 6.8 | 114.7 |
| | ஜப்பான் | 1.7 | - | 1.7 |
| | கொரியா | 0.5 | - | 0.5 |
| | குவைற் | 0.2 | - | 0.2 |
| | நெதர்லாந்து | 2.9 | - | 2.9 |
| | ஸ்பெயின் | 4.7 | - | 4.7 |
| | சவூதி நிதியம் | 7.6 | - | 7.6 |
| | சுவீடன் | 9.7 | - | 9.7 |
| | ஐக்கிய இராச்சியம் | 5.6 | - | 5.6 |
| | பிற இருதரப்பு | 7.5 | - | 7.5 |
| **பல்தரப்பு** | ஆசிய அபிவிருத்தி வங்கி | 54.0 | 12.4 | 66.4 |
| | சர்வதேச அபிவிருத்தி மையம் | 72.2 | 3.9 | 76.1 |
| | விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 3.8 | - | 3.8 |
| | சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் | 0.3 | - | 0.3 |
| | ஐரோப்பிய ஆணைக்குழு | 1.7 | 1.7 | 3.3 |
| **மொத்தம்** | | **382.5** | **26.0** | **408.5** |

*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

**வரைபு 3.3**

**கொடை வழங்குநர்கள் அடிப்படையில் வெளிநாட்டு உதவி பகிர்வு (ஐ.அ.டொ.மில்.)**

**(2011 சனவரி – ஏப்ரல்)**




## வெளிநாட்டுப் படுகடன்

- 2011 ஏப்ரல் இறுதியில் அரசாங்கத்தின் மொத்த வெளிநாட்டு படுகடன் 16.9 பில்லியன் ஐ.அ.டொலர்களாக இருந்தது.

- 2011 ஏப்ரல் 30 வரைக்குமான மொத்த படுகடன் சேவைக் கொடுப்பனவு 369.8 மில்லியன் ஐ.அ.டொலர்களாகும். இவற்றுள் 211.1 மில்லியன் ஐ.அ.டொலர் மூலதனக் கொடுப்பனவுகளுக்கானதாகும். மீதி 158.7 மில்லியன் ஐ.அ.டொலர் வட்டிக் கொடுப்பனவுகளுக்கானதாக இருந்தது. 2011 ஏப்ரல் 30 ஆம் திகதியளவில் 36 சதவீதமானவை ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளன.